Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள்–10

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -12 | 28-07-2003 | திங்கட் கிழமை | ஓசை 160




# தேசியத் தலைவர் பிரபாகரனை எவராலும் ஏமாற்ற முடியாது!

### முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர்

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களை எவராலும் ஏமாற்றமுடியாது அவர் தமிழ் மக்களின் விடிவிற்காக சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார் என முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் கூறியுள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் புலிகளிடம் இருக்கும் அசையாத நம்பிக்கை சிறிலங்காப் படையினரிடமும், அரசியல்வாதிகளிடமும் காணப்படவில்லை.

இந்தமண்ணில் தற்போது அமைதியின்மையும் பதற்ற நிலையும் முறுகல் நிலையுமே அடிக்கடி இடம்பெறுகின்றன. புலிகள் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்த பின்னர் போர் புரியவில்லை. சிறிலங்காக் கடற்படையினர் புலிகளைத் தாக்கும் போதும் அவர்கள் திருப்பித்தாக்கவில்லை. இது புலிகள் சமாதானம் மீது கொண்டுள்ள அசையாத நம்பிக்கையைக் காட்டுகிறதென அவர் மேலும் கூறியுள்ளார்.

### 90 வருடங்கள் பழைமைவாய்ந்த தேவாலயத்தை

# 14 வருடங்களின்பின் 2 மணிநேரம் மட்டும் வழிபாடுசெய்ய படையினர் அனுமதி

பலாலி விமானத்தளத்தை அண்டிய பகுதியிலுள்ள ஒட்டகப்புலம் புனிதயாகப்பர் தேவாலயத்தில் வழிபாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள படைத்தரப்பு நேற்று மாத்திரம் அனுமதித்துள்ளது.

சுமார் 14 வருடங்களின் பின்னர் தேவாலயத்தின் பங்குத்தந்தை வணபிதா அன்ரனிதாஸ் தலைமையில் திருப்பலி பூசைகள் இடம்பெற்றுள்ளன. பொது மக்கள் அச்சுவேலி முன்னரங்கப்பகுதியிலுள்ள சோதனை முகாம் ஊடாக சோதனை நடவடிக்கைகளின் பின்னர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை ஆராதனை நிகழ்வுகள் இடம்பெற்ற வேளை தேவாலயத்தின் பிரதான நுழைவாயில் தவிர்ந்த ஏனைய பாதையினை வழிமறித்துப் படையினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். 1914ஆம் ஆண்டு இத் தேவாலயம் நிர்மாணிக்கப்பட்ட

(10ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாகும் முன்பாக

# திருமலையில் அரச காணிகளை சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்க அரசாங்கம் தீவிர முயற்சி!

### திருமலை மாவட்ட பா.உ. பலத்த கண்டனம்

**வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பொன்று உருவாக்கப்படுவதற்கு முன்பாக திருகோணமலை மாவட்டத்தில் அத்துமீறி சிங்கள மக்கள் குடியேறிய காணிகளை அவர்களுக்கு வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அரசாங்கத்தின் இத்திட்டத்திற்கு தமிழ்ப் பா.உ.கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

இது குறித்து திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் கூறுகையில். சமாதான நடவடிக்கைகளை முன்நகர்த்துவதில் இடைக்கால நிர்வாகசபை பொருத்தமான அதிகாரங்களுடன் அமைக்கப்படுவது குறித்து தீவிரமாக பரிசீலித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் திருகோணமலை மாவட்ட காணி சம்பந்தப்பட்ட எந்த அவசர முடிவுகளையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்தார்.

திருகோணமலை நகரிலும் மற்றும் பல இடங்களிலும் அரச

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.என்.டி.எல்.எவ். கொழும்பில் காரியாலயம் அமைக்க முயற்சி!

ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பு கொழும்பில் பணிமனை ஒன்றைத் திறக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் முதற்கட்டமாகத் தமது அமைப்பிலிருந்து கடந்த காலத்தில் விலகிய உறுப்பினர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளவும் இந்த அமைப்பினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை ஜப்பானிற்கான இந்தியத் தூதுவர் அண்மையில் ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பைச் சேர்ந்தவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளமை தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்து ஈ.என்.டி.எல்.எவ் இன் அரசியல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளதாக நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

# சண்டே லீடர் ஆசிரியருக்கு அமைச்சர் கொலை மிரட்டல்

சண்டே லீடர் ஆசிரியருக்கு அமைச்சர் ஒருவர் பாராளுமன்ற வளாகத்தில் வைத்து கொலை மிரட்டல் விடுத்துள்ளதாகப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஊழல் நடவடிக்கையுடன் தொடர்புடுத்தி அமைச்சர் குறித்து சண்டே லீடரில் வெளிவந்த கட்டுரைகள் தொடர்பாகவே இக்கொலை மிரட்

(10ஆம் பக்கம் பார்க்க)

### குரங்குப்பாஞ்சான் முகாம் விவகாரம்

# முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு புலிகளிடம் கண்காணிப்புக்குழு கோரல்

திருகோணமலை குரங்குப்பாஞ்சான்குளம் முகாம் குறித்து முடிவை மறுபரிசீலனை செய்து முகாமை மூடிவிடுமாறு தமிழீழ விடுதலைப்புலிகளைத் தாம் கேட்டுள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் கொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தான் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கு கடிதம் எழுதியுள்ளதாகத் தெரிவித்த அவர், இதற்கான பதிலை வரும் வாரத்தில் எதிர்பார்த்துள்ளதாகவும் அதிலும் ஒரு இணக்கமான பதிலையே எதிர் பார்க்கின்றோம் எனவும் தெரிவித்த கொக்லண்ட் மேலும் கூறுகையில், இது ஒரு சிக்கலான விடயம் தான், ஆனால் கோட்பாட்டைப் பொறுத்த வரையில் இது மிகப் பெரிய விடயம் மிக முக்கியமான ஒன்று.

கடந்த சில மாதங்களாக விடுதலைப்புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சில தீர்ப்புக்களைப் புறக்கணிப்பது போல தெரிகிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்? என்று பி.பி.சி செய்தியில் கொக்லண்டிடம் கேட்டபோது,

(10ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலிக் கடற்பரப்பில் மீனவர் மீது சிறிலங்கா கடற்படை தாக்கு

(பள்ளிக்குடா)

கிளாலி - நாகதேவன்துறைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டு வரும் பூநகரி பள்ளிக்குடா மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் இப்பகுதி கடற்றொழி

(10ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நேற்று கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்

### கேணல் கருணா, தளபதிகள், பொறுப்பாளர்கள் வரவேற்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று கிழக்கு மாகாணத்திற்குப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து காலை உலங்கு வானூர்தி மூலம் புறப்பட்ட அவர் மட்டக்களப்பிலுள்ள விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான இலுப்படிச்சேனை பாடசாலை மைதானத்தில் சென்று இறங்கினார்.

அவரை மட்டு - அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் கருணா உட்பட பல தளபதிகள் வரவேற்றனர்.

பின்னர் அவர் அங்கு பிராந்தியத் தளபதிகள், அரசியல் துறைப் பொறுப்பாளர்களைச் சந்தித்தார். பின்னர் தரவை இராணுவப் பயிற்சித்தளமான மினைத்தில் நடைபெற்ற கப்டன் அன்பரசியின் ஏழாவது ஆண்டு நினைவு தினத்தில் கலந்து கொள்ளவிருந்தார்.

அரசியல்துறைப் - பொறுப்பாளர் தற்போது திருமலையில் ஏற்பட்டுள்ள குரங்குப்பாஞ்சான் படைமுகாம் தொடர்பான விவகாரம் பற்றியும் தற்போது கிழக்கு மாகாணத்தின் அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் ஆராய்வதுடன் அப்பகுதியில் உள்ள அரசியல்துறைப் பொறுப்பாளர்கள், முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரையும் சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. தமிழீழ அரசியல்துறைப்

(10ஆம் பக்கம் பார்க்க)



மட்டு. சென்றடைந்த அரசியல்துறைப் பொறுப்பாளரை மூத்த தளபதி கேணல் கருணா வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# யாழ்.குடாநாட்டு கடலுணவுகள் தென்பகுதிக்கு அடுத்தமாதம் நடுப்பகுதி முதல் ஏற்றுமதி

## வடபகுதி கடற்றொழிலாளர் கூ.ச.நடவடிக்கை

யாழ்ப்பாணத்தின் கடல் உணவுகளுக்கு தென்பகுதியில் பெரும் வரவேற்பிருப்பதால் எதிர்வரும் 11 ஆம் திகதியிலிருந்து கடல் உணவு ஏற்றுமதிகளைத் தொடர்ந்தும் நடாத்துவதற்கு வடமாகாண கடற்றொழிலாளர் சங்க சமாசம் தீர்மானித்துள்ளது.

அண்மையில் 1000 கிலோ கிராம் நண்டு, கணவாய், றால் போன்ற கடலுணவுகள் முன்னோடியாக ஏற்றுமதி செய்து பரிசீலிக்கப்பட்டுள்ளன. இது தென்பகுதியில் அதிக வருவாயையும் வரவேற்பையும் பெற்றுத் தரக்கூடியதாக அமைந்துள்ளதால் இந்நடவடிக்கை தொடரும் எனக் கூறப்படுகிறது. (33)

# இத்தாலிக்கு ஆட்களைக் கடத்தும் ரோலர் போலிசாரால் கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

இத்தாலிக்கு ஆட்களைக் கடத்திச் செல்ல ஆயத்தநிலையில் வைக்கப்பட்டிருந்த ரோலர் படகு ஒன்றை நீர்கொழும்புப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

நீர்கொழும்பு கடற்கரையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தப் படகை பொலிசார் கைப்பற்றியுள்ளனர். கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து பொலிசார் படகைக் கைப்பற்றியதோடு அதிலிருந்த பெருமளவு உணவுப் பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர். இதனையடுத்து அப்பகுதியில் காணப்பட்ட இருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# முல்லைத்தீவு செல்லும் வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில்

முல்லைத்தீவில் தற்பொழுது பெருமளவான மக்கள் மீளக்குடியேறி வருவதுடன் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் மீளவும் தமது சேவையை ஆரம்பித்துள்ள இந்த வேளையில் வீதிகள் புனரமைப்பு வெறும் கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு வீதி புனரமைக்கப்படாத நிலையில் கிரவல் கும்பிகளாக பறிக்கப்பட்டுள்ளது. இதனால் வீதியில செல்லும் வாகனங்கள் முதல் பாதசாரிகள் வரை பெரும் நெருக்கடிகளை சந்திக்கின்றனர்.

இதேபோன்று முல்லைத்தீவு சிலாவத்தை ஊடாக முள்ளியவளை வீதி, முல்லைத்தீவு, நாயாறு வீதிகள் பெரும் மோசமாகப் பாதிப்படைந்து காணப்படுகின்றன. இதனால் உத்தியோகத்தர்கள் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட வைத்திய வசதிக்காக வரும் நோயாளிகள் எனப்பலரும் குறித்த நேரத்தில் பிரயாணம் செய்ய முடியாத நிலையுள்ளது.(20)

## நிக்கோட் அமைப்பினால்

# கிளி. மாவட்டத்தில் 3 பாடசாலைகளில் இரண்டு மாடிக் கட்டடங்கள் அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்புத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூன்று பாடசாலைகளில் 126 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக நிக்கோட் திட்டப் பணிப்பாளர் பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட பெரும் யுத்தத்தால் கல்விக்கூடங்கள் அதிகளவில் சேதமடைந்து இதனால் போதிய கட்டட வசதிகள் இல்லாத நிலையுள்ளது. இந்நிலையில் நிக்கோட் திட்டத்தின் கீழ் கிளி. மாவட்டத்தில் உள்ள சென். திரேசா மகளிர் கல்லூரி, முருகானந்தா மகா வித்தியாலயம், கிளி.மத்திய மகா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகள் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டு 110 அடி 25 அடி பரப்பளவில் இரண்டு மாடிகளைக் கொண்ட கட்டடங்கள் மூன்றை மேற்படி மூன்று பாடசாலைகளுக்கு அமைத்துக் கொடுப்பதற்கான வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இதற்காக 126 இலட்சம் ரூபா செலவிடப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். (லோ)

# முழங்காவில் பிரதேசத்தில் மாதர் சங்க சங்கம நிகழ்வு

முழங்காவில் பிரதேசத்தில் பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தால் மாதர் சங்க சங்கம நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு முழங்காவில் பிரதேச மகளிர் ஒன்றியத் தலைவர் வரவணிக்காவின் தலைமையில் ஆரம்பமாகியது.

பொதுச் சுடரினை முழங்காவில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ஜெயானந்தன் ஏற்றிவைக்க தேசியக்கொடியினை முழங்காவில் பிரதேசப் பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் சந்தனா ஏற்றிவைத்தார். 2ஆம் லெப்ரினன்ட் மாலதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை கிளி. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பூவிழி ஏற்றிவைக்க, மலர்மாலையினை கிளி. மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் தமிழ்மலர் அணிவித்தார்.

கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி, அரசியல்துறை சார்ந்த தமிழ்விழி ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து மக்களின் கருத்துப் பகிர்வுகள் கலைநிகழ்சிகளும் இடம்பெற்று; செல்வி சரோஷா தேவியின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் முடிவுற்றது.

## முன்பள்ளி விளையாட்டுவிழா

கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைதீவுப்பகுதி பங்குத்தந்தையின் மேற்பார்வையுடன் நடைமுறைப்படுத்திவரும் புனித இராயப்பர் முன்பள்ளியின் விளையாட்டுவிழா கடந்த 19ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு முல்லைத்தீவு றோ.க.வித்தியாலய [illegible]னத்தில் பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் தலைமையில் நடைபெற்றது. இதில் வெற்றியீட்டிய அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. கருத்துரைகளை அளம்பில் பங்குத்தந்தை யூட் அமலதாஸ் நிகழ்த்தினார். (20)

# முல்லை. மாவட்ட வைத்தியசாலைக்கு உளச் சிகிச்சை நிபுணர் வருகை

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலைக்கு உளச்சிகிச்சை மருத்துவ நிபுணர் டாக்டர் வி.குணசிங்கம் பின்வரும் திகதிகளில் வந்து சிகிச்சையளிக்கவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் 08, 22, செப்ரெம்பர் 12, 26, ஒக்டோபர் 10, 31, நவம்பர் 14, 28, டிசெம்பர் 12, 26 ஆகிய திகதிகளிலேயே இவர் சிகிச்சையளிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (26)

## விளையாட்டு விழா

(உடையார்கட்டு)

உடையார்கட்டு-சுதந்திரபுரம் கொலணி துரோணர் முன்பள்ளி சிறார்களுக்கான வருடாந்த விளையாட்டு விழா வரும் 30ஆம் திகதி 2.00 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நிகழவுள்ளது. (19)

# இறைவரித்திணைக்களத்தை தனியார் மயமாக்க ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் திட்டம்

## பொ.ஐ.மு.பா.உ. ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தை தனியார் மயப்படுத்துவதற்காகவே அத்திணைக்களம் வருமான வரியாக இரண்டாயிரம் கோடி ரூபாவைத் திரட்டத் தவறிவிட்டதாக அரசாங்கம் பிரச்சாரம் செய்து வருவதாக பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே குற்றம் சுமத்தியுள்ளார்.

உள்நாட்டு இறைவரித்திணைக்கள திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போது அவர் வருமான வரித் திணைக்களத்தைத் தனியார் மயப்படுத்தும் படி உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் எமது ஆட்சிக்காலம் தொட்டே வலியுறுத்தி வருகின்றன.

இத்திணைக்களத்தை தனியார் மயப்படுத்துவதற்கான முதற்கட்டமாக இத்திணைக்களம் அதிகார சபையாக மாற்றப்பட்டுள்ளது.

இதன்போது பொதுமக்களின் எதிர்ப்புக் கிளம்பாதிருப்பதற்காகவே அத்திணைக்களம் செயற்றிறன் அற்றது எனக் காட்ட முனைகிறது. இதற்காகவே அத்திணைக்களம் இரண்டாயிரம் கோடி ரூபாவைத் திரட்டத் தவறிவிட்டது என அரசாங்கம் பிரச்சாரம் செய்கிறது.

மேலும் இவ் அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதாக உறுதியளித்தது. ஆனால் கடந்த வரவு செலவுத் திட்டத்தின் போது சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. இம் முறையும் வழங்க முடியாத நிலையிலேயே அரசின் நிதிநிலைமையுள்ளது. இதனைச் சரிக்கட்டுவதற்காகவே போதிய வருமான வரியைத் திரட்ட முடியவில்லை என அரசு பிரச்சாரம் செய்து வருகிறது.

மேலும் இந்த அரசு பதவிக்கு வந்ததும் தமது ஆதரவாளர்களுக்கு எதிராக வருமான வரி செலுத்தாததற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெற்றுள்ளது. இதன் மூலம் அரசுக்கு ஏற்பட்ட வருமான இழப்பு ஒரு வருட பாதுகாப்புச் செலவினத்திற்கு சமமானது. இதேநேரம் சமுர்த்தி உதவி பெறுவோருக்கான கொடுப்பனவை ஆயிரம் ரூபாவில் இருந்து 600 ரூபாவாகக்குறைந்துள்ளது. இது நியாயமா என அரசு சிந்திக்க வேண்டும்.

இது சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டமூலத்தில் லொத்தர் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு 10 சதவீத வரிவிதிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் லொத்தர் சபையைத் தனியார் மயப்படுத்திய பின் அதன்மீது வரி விதிக்கமுடியாது. எனவே தான் அதற்கு முன்னதாகவே வரியை விதித்துள்ளது.

உலக வங்கியின் சொற்படி தனியார் மயப்படுத்திய அமைப்புக்கள் எதுவுமே செயற்றிறன் உடையதாக அமையவில்லை. உலக வங்கியின் சொற்படி போக்குவரத்துச் சபை தனியார் மயப்படுத்தப்பட்டது. ஆனால் இன்று அது செயற்றிறன் குன்றியே காணப்படுகிறது எனத் தெரிவித்தார்.

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக சனாதிபதியுடன் பேச மு.கா. விருப்பம்

இடைக்கால நிர்வாக சபை சம்பந்தமாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே தயாரித்துள்ள முன் யோசனைகளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கலந்தாலோசிக்க விரும்புகிறது என முஸ்லிம் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

'பெரும்பான்மைச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியும், மாறிமாறி ஆட்சிப்பீடமேறியும் அதிகாரம் செலுத்தி வந்துள்ள பிரதான கட்சிகளான ஐ.தே.கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இரண்டும் இந்த நாட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஒற்றுமைப்படாத வரை நிரந்தரமான அமைதியும் சமாதானமும் நம் நாட்டில் ஏற்படுவது சாத்தியமில்லை எனவும் அது அறிவித்துள்ளது.

# முல்லை நகர் வைத்தியசாலையில் ஆறு நாட்கள் கிளினிக்

முல்லைத்தீவு கட்டம் 1 வைத்தியசாலையில் வாரத்தில் ஞாயிறு தவிர்ந்த ஆறு நாட்களும் எஸ்எஸ்வை மருத்துவக்குழு அனைத்துக் கிளினிக்குகளும் நடாத்த உள்ளது என்பதையும் பற்சிகிச்சை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்கள் நடைபெறும் என்பதையும் மாவட்ட வைத்திய அதிகாரி ஜி.சி.தர்மேந்திரா அறியத்தந்துள்ளார். (26)


08ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 07.03.1969

தாயக மண்ணில் 28.07.1995

லெப். கவிந்தன்

சின்னராசா இந்திரகுமார்
பாலிநகர், வவுனிக்குளம்.

இந்நாளில் இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல: 23, சிவபுரம், வவுனிக்குளம். (சி-8240)

பூ.மனோகரன் (சித்தப்பா)

03 ஆம் ஆண்டு நினைவு

பிறப்பு 21 - 07 - 1977



வீரச்சாவு 28 - 07 - 2000

மேஜர் நம்பிமாறன்
(குமாரசுவாமி நவீனன்)

கண்ணீரைச் சொரிந்துனது
கல்லறையைக் கழுவியின்று
கண் மலர்ந்த பக்களினை
காணிக்கை செய்கின்றோம்

கல்லறையின் மீதிரு
கைகளினை வைத்துனது
கனவுதனை வெல்வமென
சத்தியங்கள் செய்கின்றோம்

மாறா!... உன் நினைவுகளால்
ஆறாமல் அழுகின்றோம்
மூன்றாண்டுத் துயர்சுமந்த
நெஞ்சோடு தொழுகின்றோம்

மீதி வழி நடக்கின்றோம்
உந்தனது நினைவோடு...
மீண்டு திரும்பிடுவோம்
செந்தமிழின் விடிவோடு...

போராளித் தோழர்கள்

(3582)

# ஈராக்கில் நிலைமை மோசமடைந்து வருகிறது; அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் கவலை!

**ஈராக்கில் நிலைமை மோசமடைந்து வருவதாக அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. அமெரிக்க படையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்துவரும் நிலையில் இராணுவ அதிகாரியொருவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.**

சதாமின் பிறந்த இடமான ரிக்கிற் நகரில் கவச வாகனம் ஒன்றில் இருந்தவாறு ஊடகவியலாளருக்கு கருத்துத் தெரிவித்த அமெரிக்க இராணுவ அதிகாரியொருவர், . இரவு வேலைகளில் மாத்திரமே நாங்கள் ஆயுத பாணிகளின் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து வந்தோம். ஆனால், இப்போது நிலைமை மோசமடைந்து வருகின்றது. ஈராக்கில் போராளிகள் தற்போது பகல் வேளைகளிலும் ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள், ஆர்.பி.ஜி. மோட்டார்கள் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்த ஆரம்பித்து விட்டார்கள் என்றார்.

மேலும், ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனின் இரு புதல்வர்களும் தாக்குதலொன்றில் கொல்லப்பட்டு விட்டதாக அமெரிக்கப் படையினர் அறிவித்த பின்னர் தமக்கெதிரான தாக்குதல்கள் குறைவடையும் என்றே கருதப்பட்டதோடு அது குறித்து அறிவிக்கப்பட்டும் வந்துள்ளது. எனினும் எதிர்பார்க்கப்பட்டதற்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் இந்தச் சம்பவத்தின் பின்னரே தாக்குதல்கள் அதிகரித்து காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், தலைநகர் பாக்தாத் உள்ளிட்ட முக்கிய இடங்களில் நிலைமையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் தம்மீதான அதிரடி தாக்குதல்களைத் தடுக்கவும் அமெரிக்கப் படைகள் திண்டாடி வருகின்றன.

## பாக்தாத்தில் நேற்றும் தாக்குதல் கடற்படைச்சிப்பாய் பலியானார்

### -24 மணிநேரத்தில் ஐவர் பலி

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திற்கு தெற்கே நேற்று மதியம் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒரு அமெரிக்க கடற்படை சிப்பாய் கொல்லப்பட்டுள்ளார். ஒருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

அமெரிக்க இராணுவத் தகவல்களின் படி நேற்று மதியம் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் கொல்லப்பட்ட கடற்படை சிப்பாய் கடற்படையின் 1.வது பிரிவைச் சேர்ந்தவர் என்றும் நேற்று மதியத்துடன் முடிவடைந்த 24 மணித்தியாலயத்துக்குள்ஐந்துபடையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.



யப்பானின் வடக்கில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பாதிப்பிற்குள்ளான கட்டடத்தை புனரமைக்கும் தொழிலாளர்கள்



பிரிட்டனிலுள்ள செயற்கை அவயவம் பொருத்தும் நிலையத்துக்கு கொண்டுசெல்லதயாராகவுள்ள ஈராக்கிய சிறுவன் கடந்த ஏப்ரல் 6ஆம் திகதி அமெரிக்க விமானத்தாக்குதலில் கைகளை இழந்தார்.

## தி.மு.க.வின் நிலை என்ன?

### கம்யூனிஸ்ட் கட்சி

(சென்னை)

தமிழகத்தில் பாரதிய ஜனதாக் கட்சியை எதிர்க்கும் திராவிட முன்னேற்றக் கழகம் மத்தியில் பதவிக்காக பாரதிய ஜனதாக் கட்சியை ஆதரிக்கிறது என்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி குறை கூறியிருக்கிறது.

நேற்றுக்கட்சிக் கூட்டத்தில் பேசிய முன்நாள் முதலமைச்சரும் மார்க்சிய கம்யூனிஸ் அரசியல் தலைமைக்குழு உறுப்பினருமான ஈ.கே நாஜனார் தாம் எந்தப் பக்கம் என்ற நிலையைத் தெளிவு படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்.

## இந்தியாவுடன் பாதுகாப்பு உறவை சீர்படுத்த அமெரிக்க உயர் அதிகாரி புதுடில்லி வருகை

(புதுடில்லி)

இந்திய அமெரிக்க பாதுகாப்பு உறவுகள் குறித்து இன்று பேச்சுக்கள் இடம்பெறவுள்ளது அமெரிக்க உயர்நிலை அதிகாரியொருவர் இப்பேச்சுக்களில் பங்கேற்க இன்று புதுடில்லி வருகின்றார்.

பேச்சுக்களில் முக்கியமாக ஈராக் நிலவரம் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. அமெரிக்க முப்படைகளின் இணைத் தலைவர் ஜெனரல் றிச்சட் மஜேஜ் என்பவரே இந்தியா வருகை தரும் அதிகாரியென அறிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் தற்போதுள்ள நிலைமைகளை அதாவது அங்கு அமெரிக்கப் படைகளுக்கு எழுந்துள்ள நெருக்கடிகளை அடுத்து உலக நாடுகள் பலவற்றிற்கும் படைகளை அனுப்பிவைக்குமாறு அமெரிக்கா வேண்டுகோள் விடுத்தது இதில் முக்கிய நாடுகளில் ஒன்றாக இந்தியாவும் இடம்பெற்றிருந்தது எனினும், அமெரிக்காவின் கோரிக்கை இந்தியாவினால் நிராகரிக்கப்பட்டு விட்ட நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுநிலை மோசமடைய ஆரம்பிதத்துள்ளது.

இந்நிலையில், இவ் அதிகாரியின் வருகை முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

ஈராக்கின் தற்போதைய நிலைகள் பற்றியும், ஈராக்கில் சர்வதேச அமைதிக் காப்பாளர்களை பணியில் அமர்த்த ஐ.நா. பாதுகாப்பு சபை புதிதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுமானால் இந்தியத் துருப்புக்களை அனுப்புவது பற்றியும் இந்த சந்திப்பில் ஆராயப்படும் என அறிவிக்கப்படுகிறது.



பரிசோதனைக் குழாய் குழந்தை அறிமுகப்படுத்தப்பட்டு 25ஆவது ஆண்டு விழாவின் போது முதலாவது பரிசோதனைக்குழாய் மூலம் பிறந்த பிரித்தானிய 'லூயிஸ் பிரவுன்' அதேமுறையில் பிறந்த இரட்டைக் குழந்தைகளுடன் காணப்படுகிறார்.

## பங்களாதே ஷில் கடும் புயல் அனர்த்தம் 200பேர் காணாமல் போயினர்

### சடலங்கள் பல கடலில் மிதப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் வங்காள விரிகுடாபகுதியில் கடலில் புயலில் சிக்கியசுமார் 60 மீன்பிடிப் படகுகள் நீரில் மூழ்கியதில் சுமார் 200க்கு அதிகமான மீனவர்கள் காணாமல் போயுள்ளார்கள் என்று பொலிசாரும் அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கரிசல் கடற் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொந்தளிப்பான கடலில் இருந்து தப்பிவந்த சில படகுகளில் ஏழு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் 60 படகுகளும் 200க்கும் அதிகமான மீனவர்களும் காணாமல் போனதாக அஞ்சப்படுகிறது.

உயிர்தப்பிய சில மீனவர்கள் பல சடலங்கள் கடலில் மிதப்பதை தாம் கண்டதாகவும் கடும் காற்றும் கொந்தளிப்புக் காரணமாக அந்த சடலங்களை மீட்டு வர முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

மழையும் காற்றும் தொடர்ந்து இருந்து வருவதால் காணாமல் போனவர்கள் உயிரிழந்துள்ளதாக அஞ்சப்படுகிறது.

இம்மாதம் 8ஆம் திகதி மெக்னா ஆற்றில்படகு ஒன்று மூழ்கியதில் சுமார் 400பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.



லைபீரியா தலைநகர் மொன்ரோவியாவில் அமெரிக்க மோட்டார் குண்டுத் தாக்குதலில் இறந்தவர்களின் சடலங்கள் தேவாலயத்தின் முன்பாகக் காணப்படுகின்றன.

## இந்தியாவில் 45 லட்சம் பேர் எச்.ஐ.வி. தொற்றினால் பாதிப்பு!

### -உலக சுகாதார ஸ்தாபனம் அறிக்கை

இந்தியாவில் 45 இலட்சம் பேர் எச்.ஐ.வி. தொற்றுக்குஆளாகியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார ஸ்தாபன செய்திக் குறிப்பொன்று தெரிவித்துள்ளது.

உலகில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியுள்ளவர்களில் இது பத்து வீதம் என்றும் இந்தியாவில் எச்.ஐ.வி. தொற்றுககுள்ளாகியுள்ளவர்கள் அதிகமாயுள்ள மாநிலங்களில் தமிழகம் இரண்டாவது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் குழந்தைகளைப் பெற வைத்திய சாலைகளுக்கு நாளாந்தம் வரும் தாய்மாரில் ஒரு வீதத்திற் குமதிகமானோர் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியுள்ளமை ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எயிட்ஸ் நோய் தொடர்பான மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது குறித்து மாநாடு ஒன்று நேற்றுமுன்தினம் புதுடில்லியில் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் தலைமையில் நடைபெற்றது குறிப்பிடத்தக் கதாகும்.

## வீரப்பன் அச்சுறுத்தல்

(பெங்களுர்)

கர்நாடக மாநிலம் கெச்சிர் கோட்டைப் பகுதியில் முக்கிய பிரமுகர்களைக் கடத்திச் செல்லச் சந்தனக் கடந்தல் வீரப்பன் திட்டமிட்டு இருப்பதாகப் புலனாய்வுத் தகவல் வந்ததையடுத்து அப்பகுதிக்குச் செல்ல முக்கிய பிரமுகர்களுக்கும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கும் மானில அரசு தடைவிதித்துள்ளது.

இதனிடையே தமிழகக் கர்நாடக எல்லைப் பகுதியில் ஆசனூர் அருகில் எக்கெத்தால் வனப் பகுதியில் வீரப்பன் கும்பல் பதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலை, அடுத்து தமிழகக் கர்நாடகக் கூட்டு அதிரடிப்படையினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர்.

# சிறுவர் விளையாட்டு விழா

(புதுக்குடியிருப்பு)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வரும் வேணாவில் வண்ணன் மாதிரி முன்பள்ளிச் சிறுவர் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் கடந்த 22ஆம் திகதி சிறப்புற நடைபெற்றன.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சின்னண்ணை ஏற்றிவைத்தார். சிறுவர் விளையாட்டுக்களும் வினோத வுடை மற்றும் உடற்பயிற்சிப் போட்டிகளும் இடம் பெற்றதுடன் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (26)

# தேசிய எழுச்சி பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் தேசிய எழுச்சி பேரவையின் மாதாந்த சங்கம் கடந்த வெள்ளியன்று நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் துணைச் செயலாளர் சி.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை முல்லை. மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு ஏற்றி வைக்க, தேசியக் கொடியினை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் ஏற்றினார். முதல் மாவீரர் லெப். சங்கரின் திருவுருவப் படத்திற்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி ந. செல்வராசா சுடரினை ஏற்றி, மலர் மாலையினை அணிவித்ததைத் தொடர்ந்து, கருத்துரைகளை தமிழீழ தொழிற் சங்கங்களின் பொறுப்பாளர் முருகு பாரி மகன் தூயவன் அரசறிவியற் கல்லூரியின் விரிவுரையாளர் அரசண்ணன் ஆகியோர் ஆற்றினர்.

இதில் அரசண்ணன் தேசிய எழுச்சிப் பேரவையின் எதிர்கால செயற்பாட்டைப் பற்றியும் அதன் நடவடிக்கையினையும் எடுத்துரைத்தார்.

மேலும் இவர் வைத்தியசாலை உதவி அரச பணிமனை ஆகியன கட்டுவதற்கும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. (05)

## எட்டாம் ஆண்டு நீங்கா நினைவில்

| ஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 25 | 28 |
| 02 | 07 |
| 1974 | 1995 |



## லெப்டினன்ட் சுமன்

(சாள்ஸ் அன்ரனி விசேட வேவு)

**மகாதேவன் சுபாஸ்கரன் (ரமணன்)**

*ஈழத்தின் விடிவுக்காய் மண்ணுக்கள் வித்தான*
*எங்கள் செல்வப் புதல்வனே அன்புத் தீரி*
*ஆசைக் கோர் அண்ணாவே*
*எம்மோடு ஒன்றித்த அன்புத் தெய்வமே எட்டு ஆண்டுகள் என்ன*
*எத்தனை ஆண்டுகள் சென்றாலும் அழியாத உன் நினைவுகளோடு.*

இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

பொன்னாலை,
சுழிபுரம். (3581)

**அன்பு அப்பா, அம்மா,**
**அக்கா, தங்கை, தம்பி.**

## பிறந்தநாள் நினைவலைகள்

| தாயக மண்ணில் | தாயின் மடியில் |
|---|---|
| 20 | 28 |
| 08 | 07 |
| 1997 | 1980 |



## வீரவேங்கை சிவப்பிரியா

*சீவரெட்ணம் ஜெயந்தி*

சம்பவம் : புளியங்குளம் மீதான தாக்குதலின்போது

காலங்கள் பல கடந்தாலும் — என்றும்
கலையாதது உன்னினைவு
அன்புத் தங்கையே பிரியா
இறுதிக் கணத்தில் உரைத்த — நின்
இறுதி ஆசையானது
நிறைவேறும் நாளின்று

தகவல்:
**குடும்பத்தினர்,**
**போராளி சேல்விழி.**

(3580)

# உருத்திரபுரம் கிழக்கின் அபிவிருத்தி வேலை ஆரம்பிக்கப்படாமையால் மக்கள் அதிருப்தி!

(அலுவலக செய்தியாளர்)

உருத்திரபுரம் கிழக்கு கிராமத்தில் கிராம அபிவிருத்தி வேலைகள் எதுவும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லையென தெரிய வந்துள்ளது.

இது குறித்து உருத்திரபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வே. மகேசனுடன் தொடர்பு கொண்டபொழுது தெரிவிக்கையில்;

எமது கிராம அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் முகமாக உலக தரிசன நிறுவனத்தினர் கிராமத்தின் சகல இடங்களையும் நேரில் வந்து பார்வையிட்டனர்.

அத்துடன் உடைந்த பாலங்கள், சேதமுற்ற வீதிகள், நீர் வாய்க்கால் அணைகள் யாவையும் பார்வையிட்டு அவற்றினை புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்வதாகக் கூறிச் சென்றுள்ளரேயொழிய எதுவித புனருத்தாரன வேலைகளும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

மேற்படி கிராமத்தில் புனரமைப்புப் பணிகளை தற்போது அதாவது, கோடை காலத்திலேயே மேற்கொள்ள முடியும். தவறின் மாரி காலத்தில் இப்பகுதிகளில் எவ்வித புனருத்தாரன வேலைகளும் மேற்கொள்ளப்பட முடியாதென்று கூறினார். (சோ)

# விசுவமடுவில் கால்நடை சுகாதார வேலைத் திட்டம்

முல்லை. மாவட்டத்தில் இடம் பெறும் கால்நடைகளுக்கான உற்பத்தி, அபிவிருத்தி சுகாதார வேலைத் திட்ட இடம்பெயர் சேவையின் கீழ் முதல் இரண்டு நாட்களும் பின்வரும் வேலைத் திட்டங்கள் விசுவமடுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் தொண்டை அடைப்பான் நோயால் பாதிக்கப்பட்ட 681 மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டதுடன் தடிமனால் பாதிக்கப்பட்ட எழு மடுகளுக்கும். நான்கு ஆடுகளுக்கும் நோய்ச் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

மேலும் நான்கு மாடுகளுக்கும், இரண்டு ஆடுகளுக்கும் இதர நோய்ச் சிகிச்சையும் அளிக்கப்பட்டதுடன், இரண்டு மாடுகளும் இரண்டு ஆடுகளும் செயற்கை முறையில் சினைப்படுத் தப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து இடம்பெற்ற பயிற்சி வகுப்புக்களில் எழுபத்தொன்பது பயனாளிகள் கலந்து கொண்டு பயனடைந் துள்ளதாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது. 26)

## அழுகிய நிலையில் சடலம் மீட்பு

தலைமன்னார் பழைய பாலத்திற்கு அருகே அழுகிய நிலையில் ஆணின் சடலமொன்றை தலைமன்னார்ப் பொலிசார் புதன்கிழமை கண்டு பிடித்துள்ளார்கள்.

மிகவும் மோசமாக அழுகிய நிலையில் காணப்பட்ட இச்சடலத்தில் நீல நிற நீளக் காற்சட்டையும், வெள்ளை நிறத்தில் நீலக் கோடுள்ள மேற் சட்டையும் காணப்படுவதாகப் பொலிசார் தெரிவித்துள்ளார்கள்.

## புதிய நிர்வாகம் தெரிவு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு தெற்கில் உடையார்கட்டு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் புதிய கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தெரிவு அண்மையில் சி. இராஜேந்திரன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் சிறப்பு கருத்துரையை புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பாளர் வழங்க, கிராம அபிவிருத்தி சங்க கட்டமைப்பு தொடர்பாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வழங்கினார். அடுத்து பதினைந்து பேரடங்கிய புதிய நிர்வாகக் குழு தெரிவானது. (19)

**முள்ளிவாய்க்கால் மேற்கு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய பொங்கல் விழா**

## அறிவித்தல்

முள்ளிவாய்க்கால் மேற்கு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய பொங்கல் விழா ஆடிப்பூரம் 01-08-2003 தொடங்கி 3 நாட்கள் நடைபெறும் என்பதனை அம்மன் அடியார்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**காளியம்மா,**
**ஆலய பூசகர்.**

(3485)

## மூன்றாம் ஆண்டு நினைவாக.....

| முத்தாக | வித்தாக |
|---|---|
| 21 | 28 |
| 07 | 07 |
| 1977 | 2000 |



## மேஜர் நம்பிமாறன்/கெங்காதரன்

(குமாரசாமி நவீனன்)

செல்லவாரிபிட்டி, கண்டாவளை

"நீ நிரந்தரமானவன், அழிவதில்லை!
எந்நேரமும் உனக்கு மரணமில்லை!"


அன்னாரது நினைவு தினத்தையொட்டி அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் சக போராளிகள், நண்பர்கள், உறவினர்கள், அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

செல்லவாரிபிட்டி,
கண்டாவளை. (3577)

**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி அழைப்பிதழும் 31ஆம் நாள் நினைவலைகளும்

| அன்னையின் அணைப்பில் | ஆண்டவன் அணைப்பில் |
|---|---|
| 25 | 28 |
| 05 | 06 |
| 1925 | 2003 |



## அமரர் ஆறுமுகம் வேலும்மயிலும்

**பிறப்பிடம்: வதிரி கரவெட்டி**
**வசிப்பிடம்: முள்ளியவளை**

தன்னை உருக்கி எம்மை வளர்த்தெடுத்து நம் உயர்விற்கு வழிகாட்டி ஒளியூட்டி வாழவைத்த எமது அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் எமது இல்லத்தில் 28-07-2003 இன்று திங்கட்கிழமை நடைபெறும் இந்நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நினைவலைகளோடு
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

ஆஸ்பத்திரி அருகாமை,
முள்ளியவளை. (சி-8241)

# திசநாயக்கவின் ராஜினாமா பின்னணியில் ரத்வத்த குடும்பத்தின் சதி?

**சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரம் தொடர்பாக திறைசேரிக்கும் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கவுக்கும் இடையிலான கருத்து முரண்பாட்டினால் தனது பதவியை ராஜினாமா செய்வதாக அமைச்சர் அறிவித்திருந்தார். இதன் பின்னணி குறித்து உபுள்ஜோசப் பெர்னாண்டோ ஆராய்கிறார்**

**மொழியாக்கம் ~ வடிவேல்**

ஸ்ரீலங்காவின் அரசியல் வரலாற்றில் ஒரு சில பரம்பரைகளின் செல்வாக்கு தனது முத்திரைகளைப் பதித்து வந்துள்ளன. இன்றும் அவ்வாறான பரம்பரை உணர்வுகள் தலைதூக்கி நிற்கின்றன. அந்த வகையில் ரத்வத்த பரம்பரை மிகவும் புகழ்பெற்றுள்ளது. இந்த ரத்வத்தைக் குடும்பத்தினர் பெரும்பாலும் ஸ்ரீ.ல.சுதந்திரக்கட்சியினூடாகவே அரசியலில் புகுந்து பிரபல்யம் அடைந்திருக்கின்றனர். ஆயினும் இவர்களில் ஒருவர் தற்போது ஆளும் கட்சியில் பிரதான பதவியை வகித்து வருகின்றார். அவர் திட்ட அமுலாக்கல், அபிவிருத்தி, நிதி அமைச்சு செயலாளரான சரித்த ரத்வத்த என்பவர் நாட்டில் அரசியல் நிர்வாகத்தின் முக்கிய விடயமான நிதித்துறையின் செயலாளர் பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்சொன்னவாறு ஸ்ரீ.ல.சுதந்திரக்கட்சிக்குப் பெயர்போன ரத்வத்த குடும்பத்திலுள்ள ஒருவர் தற்போதைய ஆளும் ஐ.தே.க.வில் இணைந்து சரியாக நடந்துகொள்கிறாரா என்பது இன்று பல ஐ.தே.க. அமைச்சர்களினதும் ஆதரவாளர்களினதும் கேள்வியாகிவிட்டது.

அத்துடன் இவரின் நடவடிக்கைகள் உள்ளுக்குள்ளே இருந்து கட்சியைச் சிதறடிக்கும் திட்டமாக இருக்குமோ எனவும் சிலர் கருதுகின்றனர். ரத்வத்த ஆட்களுக்காக ரத்வத்த என்ற ஒருவர் ஐ.தே.க.வை பழிவாங்குவதற்கு திட்டமிடுகிறாரோ என்றும் சில ஐ.தே.க. உறுப்பினர் எண்ணுகின்றனர்.



ஆனாலும் முன்பு இருந்த "ரத்வத்தை"கள் அனைவரும் ஐ.தே.கட்சியினரே அவர்கள் ஸ்ரீ.ல.சுதந்திரக்கட்சியினராகியது S.W.R.D. பண்டாரநாயக்க ஐ.தே.க. விலிருந்து நீங்கியதன் பின்னரேயே. அதன் பின்னும் இருந்த ஒரு சில ரத்வத்தைகளும் ஸ்ரீமாவோ அம்மையார் ஆட்சியமைக்கும் போது கட்சிமாறினர். எனினும் ஒரே ஒரு ரத்வத்த மட்டும் ஐ.தே.க.வை.விட்டு விலக வில்லை அவரே இந்த சரித்த ரத்வத்த என்பவர்.

இவர் சில ஐ.தே.க. வினரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் கட்சிக்குள் நிலைகொண்டுள்ளார். இவரின் உறவினர் ஒருவரும் கண்டி மாநகர சபையில் உப மேயராகப் பதவியில் இருக்கின்றார்.

அன்றும் 1970-77 காலப்பகுதியில் ஸ்ரீமாவோவின் ஐக்கிய முன்னணி கூட்டணி ஆட்சியின் போது பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நீதியமைச்சராக இருந்தபோது சரித்த ரத்வத்தவும் ரணில் விக்கிரமசிங்கவும் சட்டக் கல்லூரி மாணவர்களாக இருந்தவேளை, பாராளுமன்ற உணவு விடுதியில் ரத்வத்தவின் பிரச்சினை ஒன்றுக்காக பீலிக்சுடன் மோதவேண்டிய நிலை ஏற்பட்டது. ரத்வத்த குடும்பத்தைச் சேர்ந்ததால் அப்போது சரித்த ரத்வத்தவுக்கு உயர் பதவி ஒன்று வழங்கப்பட்டது. ஆயினும் 1960-65 ஆம் ஆண்டுகளில் ஸ்ரீ.ல.சு.கட்சியை தோல்வியுறச் செய்த ரணில் விக்கிரமசிங்கவோடு இவர் பல்கலைக் கழகத்தில் நட்புடன் பழகினார். இருவரும் அங்கு மாணவர் சங்கத்தில் சிரேஷ்ட உறுப்பினர்களாகச் செயற்பட்டனர். இவர்களின் அரசியல் வாழ்க்கை ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்தே அன்று ஆரம்பமான சரித்த-ரணில் அரசியல் ஒற்றுமை இன்றும் தொடர்கிறது. ரணில் இளைஞர் விவகார அமைச்சராகவிருந்த போது சரித்தரத்வத்த இளைஞர் சேவைமன்ற தலைவராக இருந்தார். ரணில் ஐ.தே.க.வின் தலைவரானார். சரித்திரவத்த அதில் போசகரானார். இப்போது ரணில் பிரதமராக இருக்கிறார் சரித்த நிதியமைச்சின் செயலாளராக இருக்கிறார்.

ஆயினும் இன்று சரித்தவை விமர்சிப்பவர் ரத்வத்தைகளுக்கு பாடம் புகட்டிய பண்டா பரம்பரையைச் சேர்ந்த எஸ்.பி.திசநாயக்கா என்பவர். ஐ.தே.க.வில் முதலாவதாக அவரை விமர்சித்தவர் இவரே. காரணம் அவர் ஐ.தே.கட்சியை சேர்ந்தவராயினும் எஸ்.பி. திசநாயக்கவுக்கு அவரின் மீது வெறுப்பு ஏற்பட்டது. எனினும் ரத்வத்தை பரம்பரையிலிருந்து அவரை தனிமைப்படுத்திப்பார்க்க இப்போதே எஸ்.பி திசநாயக்கவுக்கு தருணம் வந்துள்ளது. ஆனால் அன்று பிரேமதாசாவுக்கு இதற்காக அதிக காலம் எடுக்கவில்லை. அவர் இவர்களின் நடவடிக்கைகளை அறிந்தே இருந்தார்.

உண்மையில் சரித்தரத்வத்தவை ஒரு அரசியல் வாதியாகக் கருத முடியாது. அவரை ஒரு உயர்பதவி வகிக்கும் நிர்வாகியாகவே கருதலாம். அவர் ஐ.தே.கவின் போசகராக இருக்கும் வாய்ப்பை இழந்தபோதும் சிறிகோத்தாவில் ரணிலின் பாதுகாப்பாளராக மாறியதால் செல்வாக்கு சற்று நிமிர்ந்தது. இப்போது ரணில் அவரை நிதியமைச்சின் செயலாளராக நியமித்ததும் நாட்டின் நிர்வாகத்தின் முக்கிய பங்கு வகிக்கும் நிதியமைச்சைச் சரியான முறையில் இட்டுச் செல்வார் என்பதாலேயே.

ஆயினும் தற்போதைய நிலையில் அவர் இதனைத் திறம்பட நிர்வகிப்பாரா என்பது கேள்வியாக உள்ளது. அதுவும் நினைக்கும் அளவுக்கு சுலபமானதல்ல. அந்த நிலையே இப்போது சரித்தவுக்கும் எஸ்பி.திசநாயக்கவுக்கும் இடையே பிரச்சினை எழுந்துள்ளது.

இது மாதிரியான அனுபவம் எஸ்.பி.திசநாயக்கவுக்கு மட்டுமன்றி அன்று பிரேமதாசவுக்கும் இருந்தது. அதாவது பிரேமதாச அன்று வீடமைப்புத்துறைக்கு பொறுப்பாக இருந்த போது நிதியமைச்சிடம் ஒதுக்கீடு பற்றி பிரேரித்தபோது இருவருக்கும் இடையில் பிணக்கு ஏற்பட்டது.

அன்று நிதியமைச்சு வீடமைப்புக்கு கட்டுபாடுகளை சுட்டிக்காட்டி ஒதுக்கீட்டை மறுத்ததுடன் அது அரசியல் நடவடிக்கையேயன்றி அபிவிருத்திப்பணியல்ல என்றும் கூறியது. இதனாலேயே பிரேமதாசவுக்கும் அப்போதைய நிதியமைச்சர் ரொனிடிமெல்லுடன மோதல் ஏற்பட்டது. இதனையடுத்து பிரேமதாச அமைச்சரவையில் காரசாரமாக உரையாற்றினார். தாம் பதவிக்கு வந்தது மக்களுக்கு சேவையாற்றுவதற்கு அன்றி அதிகாரிகளுக்காகவல்ல. என்று கூறியிருந்தார். இதற்காகத் தமது பதவியையும் இராஜினாமாச் செய்வேன் எனவும் கூறினார். மேலும் இவ்வரசியல் வாதிகள் தமது அரசை கவிழ்ப்பதற்கு திட்டமிடுவதாகவும் அவர் அன்று குற்றம் சாட்டினார். ஆயினும் அதற்கு ஜே.ஆர்.மௌனம் சாதித்தது ரொனிடிமெல்லின் நிதியமைச்சு நாட்டின் பிரதான நிர்வாக இயந்திரம் என்பதை உணர்ந்ததாலேயே.



சரித்தரத்வத்த

இவ்வாறு அன்றும் நிதியமைச்சுடன் ஏற்பட்ட முறுகல் நிலை நிதியமைச்சர் பதவி விலகக் காரணமாயிற்று. ஆனால் வீடமைப்பு அமைச்சராக இருந்த பிரேமதாச மக்களுக்கு சேவையாற்ற இருந்த தடை நீக்கியதாக நினைத்தார். இப்போதும் சமுர்த்தி, கால்நடை விவசாய அமைச்சரான எஸ்.பி.திசநாயக்க நினைப்பதும் விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்த இருக்கும் தடை நீங்கவேண்டும் என்றே . ஆயினும் நிதியமைச்சின் செயலாளர் விவசாயிகள் போன்று நாட்டினதும் மக்களினதும் அபிவிருத்தியும் பேணப்படவேண்டும் என்று கருதுகின்றார். அதனால் சரியான நிதிநிர்வாகம் இருக்க வேண்டும் என்பது அவரின் வாதம். மக்களைப் பற்றி சிந்திக்காமல் அரசியல் நடத்துவது முடியாத காரியம்.

அன்று பிரேமதாசவுக்கும் ரொனிடிமெல்லுக்கும் இடையில் அகப்பட்டு தத்தளித்த ஜே.ஆர் போன்றே இன்று ரணிலும் தவிக்கின்றார். இந்த விவசாய அமைச்சருக்கு உரம் இறக்குமதிக்காக நிதிஒதுக்குவது தொடர்பாக இடையில் எழுந்துள்ள பிரச்சினை மூலம் ரத்வத்த கட்சிக்குள் பிளவை ஏற்படுத் தும் வகையில் நீறுபூத்த நெருப்பாகக் காணப்படுவதாக ஏனைய ஐ.தே.க. உறுப்பினர்கள் சிந்திக்கின்றனர்.

எனினும் இந்த இருவரினதும் ஒற்றுமை என்பது நீரும் எண்ணெயும் சேர்வது போன்றதாகவுள்ளது. இந்தக் கட்சிக்குள் இருக்கும் உறுப்பினர்கள் அனைவரும் அன்று பல்கலைக்கழக மாணவர்களே. அவர்கள் பல்கலைக்கழக மாணவர்களாக இருந்த போது யாவரும் சமமானவர்களாகவே கருதப்பட்டனர். இதே ஒற்றுமையை, சமத்துவத்தை கட்டிக்காக்க வேண்டிய பின்னணி ஒன்று உருவாக வேண்டும் என்பதே இன்றைய தேவை.

# சட்டவிரோத ஆட்கடத்தலில் ஈடுபட்ட முக்கிய நபரைப் பிடிக்க 'இன்ரர்போல்' உதவி!

(கொழும்பு)

சட்ட விரோதமாக இத்தாலிக்குச் செல்வதற்கென வெளிநாட்டவர்களை சிறிலங்காவுக்குள் கொண்டுவரும் முக்கிய நபரொருவரைத்தேடி சி.ஐ.டி.யினர் வலைவிரித்துள்ளனர்.

சர்வதேச மாபியர்களுடன் தொடர்புடைய இந்நபர் தப்பிச் செல்லாமல் இருக்க விமான நிலையம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், பங்களாதேஷ் பிரஜைகளை சிறிலங்காவுக்குக் கொண்டுவந்து சட்டவிரோதமான முறையில் இத்தாலிக்கு அனுப்பும் தளமாக சிறிலங்காவை பயன்படுத்துவதில் இந்த நபரே முக்கியமானவரெனத் தெரியவந்துள்ளது. இவரைப் பிடிப்பதற்காக சிறிலங்கா இன்ரர்போலின உதவியை நாடியுள்ளது.

இருவரை இத்தாலிக்கு அனுப்புவதற்கு மூன்று இலட்ச ரூபா முதல 10 இலட்சம் ரூபா வரை அறவிடுவதாகவும் ஒருவரை இத்தாலிக்குக்கொண்டுசெல்ல குறைந்தது ஒருமாத காலம் எடுக்கிறது. கடற்பயணம ஒழுங்குகளுக்கு மாபியாக்களின் உதவியே பெறப்படுகிறது. அதற்கு இலட்சக் கணக்கான தொகையைக் கொடுப்பது தெரியவந்துள்ளது.

# தேங்கிக்கிடக்கும் வழக்குகளை துரிதமாக விசாரிக்க முடிவு

(கொழும்பு)

நீதிமன்றுகளில் நீண்ட காலமாக இடம்பெற்று வரும் வழக்குகளைத் துரிதமாக விசாரணைசெய்து முடிப்பது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதனையடுத்து சகல நீதிமன்ற நடவடிக்கைகளும் முழுமையாக கணினி மயப்படுத்தப்பட்டுள்ளது. பிரதம நீதியரசின் ஆலோசனையைப் பெற்று சட்ட அதிகாரிகளுக்கு வெளிநாடுகளில் பயிற்சியளிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது விடயமாக வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு-கல்முனை நெடுஞ்சாலையில் படையினர் நடவடிக்கை அதிகரிப்பு!

மட்டக்களப்பு - கல்முனை நெடுஞ்சாலையில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. கல்லடிப் பாலத்திற்கும், காத்தான் குடி நகரிற்கும் இடைப்பட்ட பிரதான வீதியில் அதிக எண்ணிக்கையிலான பொலிசார் நவீன ஆயுதங்களுடன் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் கல்முனை வரையான பிரதான வீதியிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளையில் இவ்வீதியில் இராணுவத்தினரும் கவசவாகனத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கோட்டை முனைப் பாலத்தில் மட்டக்களப்பு நகருக்குள் நுழைபவர்கள் சோதனைக் கெடுபிடிகளுக்கு ஆளாகி வருகின்றார்கள்.

இதேவேளை பல இடங்களில் வாகனப்போக்குவரத்துப் பொலிசாரும் ஆயுதங்களுடன் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பாலங்கள் புனரமைப்பு

(அலுவலகச் செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு சமுதாய அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூன்று பெரும் பாலங்கள் 130 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட உள்ளது என நிக்கொட் திட்டப்பணிப்பாளர் பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

கடந்த 20 வருடங்களாக புனரமைப்புப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாது. மிகவும் மோசமாக சேதமடைந்த நிலையில் உள்ள கந்தபுரம் கோணாவில் மரப்பாலம், மற்றும் புதுமுறிப்பு கோணாவில் பாலம், வன்னேரிக்குளம் பண்டி வெட்டிவீதியில் அமைந்துள்ள பாலம் என்பனவே வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது. (லோ)

# இலங்கை அரசு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்

## கடன் இல - 2880 சி. இ. (C.E)

## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
## (நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி (I.F.B)

ஐ.எவ்.பி. இல: கே.என்/நீரப்/சி.எல்.ஜி/01 — திகதி: 25.07.2003

01. வடக்கு கிழக்கு துரித மீளமைப்புத்திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடன் ஒன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனில் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர். டி. (IBRD) கடன் வசதி ஐ.டி.ஏ. (IDA) நம்பிக்கையின் கீழான வசதி.

02 மாவட்டச் செயலாளர், கிளிநொச்சி, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரரிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதி நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

03 மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான கிளிநொச்சி மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (நுசயகவ) சமர்ப்பிப்பதன் பேரில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 28.08.2003ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04 ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சி.

05 சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப்பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 29.08.2003ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும்.

**தலைவர் (துரித மீளமைப்புத் திட்டம்)**
**கேள்விச்சபை,**
**மாவட்டச் செயலகம்,**
**கச்சேரி,**
**கிளிநொச்சி.**

அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளான்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுதிறக்கப்படும்.

06 வேறு விபரங்கள் தேவைப்படின் , கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

**அட்டவணை**

| கேள்வி குறியீட்டு இல. | வேலை விபரம் | கேள்வி பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்றப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கே.என்/நீர்ப்/சி.எல்.ஜி/சி.பி./01 | பி.உ.உ.ஆ. அலுவலக கட்டடம் மீள் நிர்மானம். | 90,000.00 | 800.00 | 10 மாதங்கள் |
| கே.என/நீர்ப்/சி.எல்.ஜி/சி.பி./02 | பூநகரி பி.ச.காரியாலய கட்டடம் மீள் நிர்மாணம். | 90,000.00 | 800.00 | 10 மாதங்கள் |
| கே.என்/நீர்ப்/சி.எல்.ஜி/சி.பி./03 | கிளிநொச்சி பி.ச. ஆ நகர மண்டபம் கட்டடம் மீள் நிர்மாணம் | 170,000.00 | 800.00 | 12 மாதங்கள் |
| கே.என்/நீர்ப்/சி.எல்.ஜி/சி.பி./04 | பச்சிலைப்பள்ளி பி.ச. கட்டடம் மீள் நிர்மாணம். | 90,000.00 | 800.00 | 10 மாதங்கள் |

07 கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்கான செயற் பிரமாணக் குறிப்புக்கள் நான்காம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளின் ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விளம்பரத்திலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேளைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும் ஆளணியும் அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்திற்கு தேவைப்படும் தகைமைகளை திருப்திப்படுத்துவதாக வேண்டும்.

**தி. இராசநாயகம்,**
**மாவட்டச் செயலாளர், அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-8445)

# புலம்பெயர்ந்த எம் உறவுகள் வருகையோடு கலை வருகையும் எம்மை மகிழ்விக்கிறது

## - கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

**புலம்பெயர்ந்த எம் உறவுகள் தற்போது பெருமளவில் தாயகம் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். எமது உறவுகளின் வருகையோடு இணைந்த இந்தக் கலை வருகைகளும் எம்மை நிறையவே மகிழ்ச்சிப்படுத்துகின்றன. இவ்வாறு தமிழீழ கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.**



செஞ்சோலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'புலத்திலிருந்து ஒரு தமிழீழ குயில்' இசைத்தட்டு வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழீழத்திலே இதுவரை சுமார் 65ற்கும் மேற்பட்ட இசைத்தட்டுக்களை வெளியிட்டுள்ளோம். அவற்றில் முற்றிலும் வித்தியாசமான ஒரு இசைத்தட்டை நாம் வெளியிடுவதில் பெருமை அடைகின்றோம்.

தற்காலத்தில் நிலம் புலம், புலம் களம் என பிரித்துப் பார்க்கின்ற காலம் அருகிவிட்டது. இன்று களமும் புலமும் ஒன்றாக இணைந்து நிற்கின்ற காலம். எமது புலம் பெயர்ந்த உறவுகள் தற்போது பெருமளவில் தாயகம் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். எமது உறவுகளின் வருகையோடு இணைந்த இந்தக்கலை வருகைகளும் எம்மை நிறையவே மகிழ்ச்சிப்படுத்துகிறது.

இன்று வெளியிடப்படுகின்ற இந்த இசைத்தட்டு ஒரு ஒன்பது வயதுடைய சிறுமியால் பாடப்பட்ட பாடல்கள். மிகவும் சிறப்பான முறையில் தமிழீழத்தின் பெற்றோர் களுக்கு நோர்வேயில் பிறந்த இந்தச் சிறுமி பாடல் பாடியிருக்கிறார். இவருடைய இந்த இசைத்தட்டின் வருகை ஒரு புதிய செய்தியை எமக்கு எடுத்துச் சொல்கிறது. புலத்தின் உடைய சோகங்களை எமக்கு சொல்கிறது.

இனி உருவாகப் போகும் புலம் பெயர் இலக்கியங்களில் புலம் பெயர் நாடுகளில் நீங்கள் படுகின்ற துன்பங்கள் துயரங்களையும் மகிழ்ச்சிகளையும் வெளிப்படுத்தும் வகையில் உருவாக்க வேண்டும். நீங்கள் அடைகின்ற துயரங்களை வெளியில் இருப்பவர்கள் அறிய வேண்டும் என்பது எமது அவா எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

## ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 10.00 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபோது தவிர்க்க முடியாத காரணத்தினால் இக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

## குற்றச் செயல்களில் ஈடுபட்ட 23 பேர் தெகிவளையில் கைது

(கொழும்பு)

கொழும்பு - தெகிவளைப் பகுதியில் இராணுவத்தினரும், பொலிசாரும் கூட்டாக நடத்திய தேடுதல் நடவடிக்கையில் 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருவோரைக் கைது செய்யும் முகமாகவே கடந்த வியாழக்கிழமை இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 23 பேரும் தெகிவளையில் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## 35 இலட்சத்தை வென்றவர் பரிதாபகரமாக உயிரிழப்பு

(கொழும்பு)

35 இலட்சம் ரூபாவை லொத்தர் சீட்டு ஒன்றில் பரிசாக வென்றெடுத்த நபர் உயிரிழந்த சம்பவம் ஒன்று மொரகாகேனையில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் கொரனை மொரகாகேனை பொலிசாரினால் கைது செய்யப்பட்டதன் பின்னர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட பின்னர் உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

இவரின் மரணத்திற்கு பொலிசார் காரணமாக இருந்தால் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## யாழ்.நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகளில்லை

### அ.சா. நிறுவனங்களின் இணையம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்கள் அடிப்படை வசதிகளின்றி அலைப்படுவதாக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினரால் அண்மையில் யாழ். குடாநாட்டிலுள்ள நலன்புரி நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மீள்குடியமரும் மக்களுக்குரிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக பல சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் குடாநாட்டில் செயற்பட்டு வருகின்றன. இருந்தபோதும் அவை இக்குடும்பங்களின் புனர்வாழ்வில் பாராமுகமாக இருப்பது மிகவும் வேதனை அளிப்பதாக இணையவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் மைதான புனரமைப்பு இல்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதான புனரமைப்பிற்கான நிதி ஒதுக்கப்பட்டும் அதற்கான வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. மைதான புனரமைப்பிற்காக இருபது இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படாமையால் மாவட்டத்தின் விளையாட்டு போட்டிகளை நடத்துவதில் தொடர்ந்தும் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (20)

## சாமிப்புலம் திலீபன் மருத்துவமனையில் 47,363 நோயாளருக்கு சிகிச்சை

### -- சுவாச நோய்களாலேயே அதிகமானோர் பாதிப்பு

(பூநகரி)

பூநகரி சாமிப்புலம் கிராமத்தில் இயங்கும் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் கடந்த பதினாறு மாத காலப் பகுதியில் 47 ஆயிரத்து 363 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த 13-03-2002 முதல் 22-07-2003 வரையிலான காலப்பகுதியிலேயே இவ்வளவு தொகையான நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாறு சிகிச்சை பெற்றோரில் கூடுதலானோர் சுவாசத்துடன் தொடர்புடைய நோய்களுக்காகவே சிகிச்சை பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (34)

## இந்திய அகதி முகாம்களில் பிறந்தவர்களின் பிறப்பை உரியவகையில் பதிவுசெய்ய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இந்திய அகதி முகாம்களில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பை இலங்கைச் சட்டதிட்டங்களுக்கு அமைய உரியவாறு பதிவுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் இருந்து இலங்கை திரும்புவோர் இந்தியாவில் பிறந்த தமது பிள்ளைகளின் பிறப்பை உரியவாறு இலங்கையில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக இந்த நடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான படிவத்தை பிரதேச செயலகங்களில் பெற்றுப் பூர்த்தி செய்து கீழ்வரும் ஆவணங்களுடன் இணைத்து பிரதேச செயலரிடம் சமர்ப்பித்தால் பிறப்பை பதிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட காணிப் பதிவாளரும் மேலதிக மாவட்ட பதிவாளருமான சதாசிவ ஐயர் தெரிவித்துள்ளார்.

பெற்றோர் விவாகச் சான்று அல்லது அதனை உறுதிப்படுத்தும் ஆவணம், பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்கள். பிள்ளைகளின் பட்டியல் பிள்ளைகள் வெளிநாட்டில் பிறந்தது என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ், அகதிகளாக இந்தியா சென்று திரும்பியதை உறுதிப்படுத்தும் சான்றிதழ், பெற்றோர் தற்போது வதியும் பிரிவு கிராம அலுவலரின் கடிதம் என்பவற்றை இணைத்து பிரதேச செயலரிடம் கையளிக்கும் பட்சத்தில்.

பிரதேச செயலரால் பெறப்படும் விண்ணப்பம் பதிவாளர் நாயகத்தின் ஊடாக வெளிநாட்டு அமைச்சுக்கு அனுப்பப்பட்டு சென்னை அல்லது திருச்சியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு பதிவு செய்து கொள்ள ஆவன செய்யப்படும் என சதாசிவ ஐயர் மேலும் தெரிவித்தார்.

## பாதாளக் குழுவின் சகோதரர்கள் கைது

(கொழும்பு)

தென்னிலங்கையில் கொலைகள், குற்றச் செயல்களோடு சம்பந்தப்பட்ட தென்பகுதி பாதாளக் குழுவில் சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரகசியப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மீட்டியாகொட கஹுபிட்டிய என்ற இடத்திலுள்ள வீடொன்றை சோதனையிட்ட போது, 4 துப்பாக்கிகள், குண்டுகள் என்பவற்றோடு மேற்படி சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பாக தீவிர விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

## பேருந்தில் கொள்ளை

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கி வந்து கொண்டிருந்த இரவு நேர பேருந்து பயணிகளிடம் பணம், நகைகள் ஆயுதம் தாங்கிய முகமூடி நபர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அநுராதபுரம் நொச்சியாகம பகுதியில் அதிகாலை 1.20 மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

## நோர்வே மத்தியஸ்தம், புரிந்துணர்வு உடன்படிக்கை; சுதந்திர கட்சி - ஜே. வி. பி. யிடையில் கருத்து முரண்!

### - எதிர்காலப் பேச்சுக்களும் முறியலாம்

(கொழும்பு)

புதிய அரசியல் கூட்டணி ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் சிறி லசுக.-ஜே.வி.பி. பேச்சுக்களில் இனப்பிரச்சினைத் தீர்வில் 2002இல் பொ.ஐ.மு. அரசு முன்வைத்த யோசனைகளை தற்காலிகமாக ஜே.வி.பி. ஏற்றுக்கொண்டாலும் சமாதான நடவடிக்கைகளில் நோர்வேயின் தலையீடு புலிகள்-அரசு புரிந்துணர்வு உடன்படிக்கைத் தொடர்பில் ஜே.வி.பி. எதிர்ப்பைக் காட்டுவதால் கூட்டணி பற்றிய எதிர்காலப் பேச்சுக்கள் நடைபெறாதுவிடும் நிலையேற்பட்டுள்ளதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கூட்டணி முயற்சி வெற்றிபெறின் முதலாவது நடவடிக்கையாக புலிகள்-அரசு ஏற்படுத்தியுள்ள புரிந்துணர்வை அடியோடு நிராகரிப்பதும் மத்தியஸ்தம் வகிக்கும் நோர்வேயின் செயற்பாட்டை நீக்குவதுமே ஜே.வி.பியின் நோக்கமாகும் என கூறப்படுகிறது. எனினும் இதற்கு சிறி.ல. சு.கட்சி முழுமையாக எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் புரிந்துணர்வில் கூறப்படும் சில கருத்துக்களை மாற்றுவதற்கு மட்டும் தாம் ஒத்துழைப்பு நல்குவதாகவும் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

அன்றியும் நோர்வே அரசை முதலில் மத்தியஸ்தம் வகிக்குமாறு கோரியது. பொ.ஐ. முன்னணி அரசின் நாயகி சந்திரிகாவே என்ற வகையில் கூட்டணியின் பின்னர் ஜே.வி.பியினால் எந்த ஆட்சேபனையையும் தெரிவிக்க முடியாது போகலாம் என்ற நிலையும் தோன்றியிருக்கிறது.

இந்த நிலை நீடிக்குமாயின் கூட்டணி அமைத்தல் சாத்தியமாகாது போகும் அதன்பின் ஜே.வி.பி. "நாட்டைப் பிரிக்கும் சக்திகளுக்கு எதிரான" அமைப்பொன்றை உருவாக்கி இரு பிரதான கட்சிகளுக்கும் எதிராகச் செயற்படுவதற்கும் மக்களைத் தூண்டிவிடுவதற்கும் திட்டமிடுவதாகவும் தெரிகிறது.

எனினும் சனாதிபதியின் தற்போதைய நோக்கமாயிருப்பது முரண்பாடுகளை நீக்கி கூட்டணியமைத்து பிரதமர் பதவியையும் உள்நாட்டலுவல்கள் பதவியையும் மாற்றி உடனேயே அரசைக் கலைத்து தேர்தல் நடத்த உத்தேசித்துள்ளதாகவும், தேர்தலில் வெற்றியடைந்தால் முன்னைய ஐ.தே.க. உறுப்பினர்களின் ஆதரவுடன் ஜே.வி.பி.யை ஓரம் கட்டிவிட்டு வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண்பது சனாதிபதியின் கணிப்பாகும் எனத் தெரியவருகிறது.

## இலங்கை அரசு
## வடக்கு கிழக்கு மாகாண சபை
## வடக்கு கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
## கடன் இல - 2880 சி. ஈ. [C.E]

## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
## (சிறிய நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி (I.F.B)

**ஐ.எவ்.பி. இல: கே.என்/நீரப்/சி.எல்.ஜி/02** **திகதி: 25.07.2003**

01. வடக்கு கிழக்கு துரித மீளமைப்புத்திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடன் ஒன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனில் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர். டி. (IBRD) கடன் வசதி ஐ.டி.ஏ. (IDA) நம்பிக்கையின் கீழான வசதி.

02 மாவட்டச் செயலாளர், கிளிநொச்சி, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதி நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

03 மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான கிளிநொச்சி மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (ஜுசயகவ) சமர்ப்பிப்பதன் பேரில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 28.08.2003ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04 ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சி.

05 சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப்பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 29.08.2003ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும்.

**தலைவர் (துரித மீளமைப்புத் திட்டம்)**
**கேள்விச்சபை,**
**மாவட்டச் செயலகம்,**
**கச்சேரி,**
**கிளிநொச்சி.**

அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளான்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுதிறக்கப்படும்.

06 வேறு விபரங்கள், தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

### அட்டவணை

| கேள்வி குறியீட்டு இல. | வேலை விபரம் | கேள்வி பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்றப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கே.என்/நீரப்/சி.எல்.ஜி/சி.பி./05 | பளை நகர நூல்நிலைய கட்டடம் மீள் நிர்மாணம். | 36,000.00 | 250.00 | 08 மாதங்கள் |
| கே.என்/நீரப்/சி.எல்.ஜி/சி.பி./06 | இயக்கச்சி ஆயுர்வேத கட்டடம் மீள் அமைத்தல் | 34,000.00 | 250.00 | 06 மாதங்கள் |

07 கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்கான செயற் பிரமாணக் குறிப்புக்கள் மூன்றாம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளின் ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விளம்பரத்திலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்ளை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும் , அனுபவமும், இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்திற்கு தேவைப்படும் தகைமைகளை திருப்திப்படுத்துவதாக வேண்டும்.

**தி. இராசநாயகம்,**
**மாவட்டச் செயலாளர், அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-8444)



**சிந்தனைக்கு**

மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.

தமிழீழத் தேசியத்தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 28-07-2003

# வெட்கக்கேடு!

அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கவை மீண்டும் பொ. ஐ. முன்னணியில் சேர்ப்பதற்கு சனாதிபதி சந்திரிகா முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக ஊடகங்கள் கூறுகின்றன. இதற்கான நடவடிக்கைகளில் முன்னாள் அமைச்சரும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நெருங்கிய சகாவுமான மங்கள சமரவீர ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

சனநாயக ஆட்சி நடைபெறும் நாடுகளில் – அதிலும் குறிப்பாக தென்னாசியா நாடுகளில் கட்சிகளை உடைப்பதும், கட்சிகள் உடைவதும் சாதாரணமானதொரு நிகழ்வே ஆகும். இதன் காரணமாக இந்நாடுகள் அநேகமானவற்றில் கட்சித் தாவல் தடைச் சட்டம் இருப்பினும் அவற்றால் பலன் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு இருந்திருப்பின் தற்பொழுதும் கட்சித் தாவல்கள், உடைப்புக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் எவ்வாறு ஏற்பட்டிருக்க முடியும்?

எஸ்.பி. திஸநாயக்கவிற்கு தற்போதைய அரசின் நடவடிக்கைகளில் திருப்தியீனங்கள் இருத்தல் கூடும். இதனால், அவர் அதிருப்திக்கும் உள்ளாகியிருத்தல் கூடும். அதிலும், அண்மையில் திறைசேரி அவரின் அமைச்சிற்குரிய நிதியை ஒதுக்கீடு செய்யாமை காரணமாக அவர் அரசாங்கத்துடன் முரண்படவும், மனக்கசப்புக் கொள்ளவும் வேண்டியதாயிற்று. இம்முரண்பாடு அவர் அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்யும் அளவிற்குக்கூடப்போனது. ஆயினும், அது பின்னர் சரிக்கட்டப்பட்டுவிட்டது.

ஆனால், அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கவிற்கும் ஐ.தே. முன்னணி அரசாங்கத்திற்கும் இடையிலான முரண்பாட்டினைப் பயன்படுத்தி மீண்டும் அவரை பொ. ஐ. மு. பக்கம் இழுக்க சனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட முயற்சியானது வெட்கக்கேடானது. ஏனெனில், சந்திரிகா குமாரதுங்கவிற்கும், எஸ்.பி. திஸநாயக்கவிற்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடும், இதனை அடுத்து அவர்கள் பரிமாறிய வார்த்தைகள் கடுமையானவை மட்டுமல்ல் கேவலமானவையும்கூட.

எஸ்.பி. திஸநாயக்க பொ.ஐ. முன்னணியில் இருந்து வெளியேறியபோதே, சந்திரிகா குமாரதுங்கவிற்கும், அவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு மிகவும் மட்டரகமானது. ஒருவரை ஒருவர் கொலைக்காரர், மோசடிக்காரர் எனத் திட்டித் தீர்த்துக் கொண்டனர்.

இதன் பின்னர் எஸ். பி. திஸநாயக்க ஐ. தே. முன்னணியில் இணைந்து அமைச்சரான பின்னரும்கூட சனாதிபதி சந்திரிகாவுடனான முரண்பாடு / கருத்து மோதல் என்பன தணிந்ததாகவோ மாற்றம் கண்டதாகவோ இருக்கவில்லை. ஒருவரை ஒருவர், பரஸ்பரம் குற்றம் சாட்டியதோடு, ஒருவருக்கு ஒருவர் இடையூறு விளைவிப்பவர்களாகவே இருந்தனர்.

இந்த வகையில் ஐ. தே. முன்னணி அரசாங்கம் தமது அமைச்சரவையை அமைத்தபோது எஸ்.பி. திஸநாயக்கவிற்கு சத்தியப் பிரமாணத்தினைச் செய்து வைக்க சனாதிபதி சந்திரிகா மறுப்புத் தெரிவித்தார். அதிலும் குறிப்பாக, சமுர்த்தி அமைச்சை அவருக்கு வழங்க தாம் அனுமதிக்கப்போவதில்லை என சனாதிபதி தெரிவித்தார். ஏற்கனவே, பொ.ஐ. முன்னணி ஆட்சிக் காலத்தில் சமுர்த்தி அமைச்சராக எஸ். பி. திஸநாயக்க இருந்தபோது– சனாதிபதி சந்திரிகாவுடன் முரண்பாடு ஏற்பட்டதை அடுத்து எஸ்.பி. திஸநாயக்க மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதன் பின்னர் அரசாங்கத்தின் அழுத்தம் காரணமாக எஸ்.பி. திஸநாயக்கவிற்கு பதவிப் பிரமாணம் செய்துவைக்க சனாதிபதி சந்திரிகா உடன்பட்டாராயினும், நான்கு தடவைகள் ஒத்திவைத்த பின்னரே எஸ்.பி. திஸநாயக்கவிற்கு அவர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அதாவது, தன்னால் இயன்றவரை எஸ்.பி. திஸநாயக்கவை அவர் அவமானப்படுத்த முனைந்தார் என்றே கூறலாம்.

இது ஒருபுறம் இருக்க, எஸ்.பி. திஸநாயக்கவின் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தும் வகையில் நடவடிக்கைகளை அவர் முனைப்புப் படுத்தியும் இருந்தார். எஸ். பி. திஸநாயக்கவின் புதிய வீடு ஒன்று தொடர்பாகச் சர்ச்சையைக் கிளப்பிய அவர், ஊழல் மோசடியின் குறியீட்டுச் சின்னமாக அவ்வீட்டினையும் காட்ட முனைந்தார். ஆனால், எஸ்.பி. திஸநாயக்க ஊழல், மோசடியில் ஈடுபட்டாரோ இல்லையோ அவர் மீது பாரிய ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களையும் வன்முறைக்குற்றச்சாட்டுக்களையும் சுமத்திய சனாதிபதி சந்திரிகா தற்பொழுது எஸ்.பி.திஸநாயக்கவிடம் தூது விடுவதானது மிகவும் அவமானகரமானது, அருவருக்கத்தக்கது.

அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நண்பனும் இல்லை என்பது அழகானதொரு மேற்கோள்தான். ஆனால், அரசியலில் உள்ளவர்களுக்கு தன்மானமும் இல்லை, சுய கௌரவமும் இல்லை என்ற வகையில் ஒரு மேற்கோள் இருப்பதாக அறியமுடியவில்லை. ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எஸ்.பி. திஸநாயக்கவிற்குத் தூதனுப்பியது இதனைத்தான் குறிக்கின்றது. இருப்பினும், இது சந்திரிகா குமாரதுங்கவிற்கு பெரிதானதொன்றாக இருக்கமாட்டாது. ஏனெனில், தனது கணவரைக் கொன்றவர்கள் எனத் தெரிந்திருந்தும் ஜே.வி.பி.யுடன் கூட்டு வைக்கத் தீவிரமாக முயலும் அவருக்கு இது சிறியதொரு விடயமே.

ஆனால், இது தனியாக சிறிலங்காவிற்கும் சந்திரிகாவிற்கும் மட்டும்தான் பொருத்தப்பாடான தொன்றல்ல. தென்னாசியாவில் 'சனநாயக' ஆட்சி, நடைபெறும் நாடுகள் யாவற்றிலும் இவ்வாறானவர்களும், இவ்வாறான கட்சிகளும் இருக்கத்தான் செய்கின்றன. இதற்கு தன்மானத்தையும், சுய கௌரவத்தையும் விட ஆட்சி அதிகாரம் பெரிது என அவர்கள் கருதுவதே காரணமாகும்.

# மக்களின் பூரண ஒத்துழைப்பு இருந்தாலே சமாதான முயற்சிகளை முன்னெடுக்கலாம்

## - அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு பொது மக்களின் பூரண ஒத்துழைப்பு தேவை என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் மாத்திரம் தனித்து சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புத்திஜீவிகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சந்தித்து உரையாடியபோதே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு மேலும் தெளிவாக விளக்க வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக புத்திஜீவிகளும் சிவில் சமூகங்களுடன் தொடர்புபட்ட அமைப்புக்கள் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் இதற்கு அரசாங்கம் பூரண ஆதரவைப் பெற்றுக்கொடுக்கும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மூன்று வருட அபிவிருத்தித் திட்டங்களுக்காக பிரதமர் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம்

(கொழும்பு)

அடுத்து மூன்று வருட காலத்திற்கான அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கவும் வரவு-செலவுத் திட்டத்தினைத் தயாரிக்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 31ஆம் திகதி அமைச்சரவைக் குழுவுடன் முழுநாள் கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளார்.

வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை அதிகரிக்கும் பொருட்டு பிரதமர் கடந்த செவ்வாய்க்கிழமை (22) தனியார் துறையினரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் பிரதமர் தனியார் துறையினரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். இந்தப் பின்னணியில் பிரதமர் அமைச்சரவைக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வார் என அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# கசிப்பு தயாரிப்பிட முற்றுகையில் பொலிசார் மீது தாக்குதல்!

## ஒருவர் தடுத்து வைப்பு

(கொழும்பு)

கசிப்புத் தயாரிப்பு நிறுவனமொன்றை முற்றுகையிடச் சென்ற பதுளைப் பொலிஸ் குழுவினர் கடுமையாகத் தாக்கப்பட்டனர். கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பதுளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் கசிப்புத் தயாரிப்போர் என்று கருதப்படுவோரால் சிறை வைக்கப்பட்டிருந்தார். இச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து பெரும் தொகையான பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து சுற்றி வளைத்து நடத்திய தேடுதலில் குறிப்பிட்ட சிறை வைக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரை மீட்டதுடன் ஐந்துபேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். இவர்களில் கசிப்பு தயாரிப்போரினால் சிறை வைக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஆபத்தான நிலையிலிருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

# பங்களாதேஷ் வீரர்களின் முன்னேற்றம் அச்சமடைய வைக்கிறது

## - பாகிஸ்தான் அணித்தலைவர்

அவுஸ்திரேலிய சுற்றுலாவில் பங்களாதேஷ் வீரர்கள் தமது திறமைகளை வெளிக்காட்ட ஆரம்பித்துள்ளமை தனக்கு அச்சம் தருகிறது என பாகிஸ்தான் அணித்தலைவர் ரஷீத்லத்தீப் தெரிவித்துள்ளார்.

பலம் வாய்ந்த அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரின் போது சகலநிலைகளிலும் தன்மைகளை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பு பங்களாதேஷ் வீரர்களுக்கு உண்டென்பதை உணர்ந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர் இத்திறமைகள் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரின்போது வெளிக்காட்டப்படலாம் எனவும் எனவே பங்களாதேஷ் வீரர்களைக் குறைவாக எடைபோடாது எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று லத்தீப் தெரிவித்துள்ளார்.

உலகின் எந்த அணியும் அவுஸ்திரேலியர்களுடன் ஈடுகொடுப்பது கஷ்டமானது. அண்மையில் நிறைவுபெற்ற சுற்றுலாவின்போது பாகிஸ்தான் அணியும் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டம் இழந்து தோல்வியுற்றதைச் சுட்டிக்காட்டிய அவர், பாகிஸ்தான் வீரர்கள் தமது திறமைகளை இத்தொடரில் வெளிக்காட்டவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# முதல் இனிங்சில் 556 ஓட்டங்கள் ஸ்ரீவ்வோ சதம் அடித்துச் சாதனை

அவுஸ்திரேலியாவில் கெயான்ஸ் நகரில் நடைபெற்று வரும் அவுஸ்திரேலிய பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று தேநீர் இடைவேளைக்கு சற்று முன்னர் அவுஸ்திரேலிய அணி தனது முதல் இனிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 556 ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டதாக அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் தனது முதல் இனிங்சில் 295 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ்வோ சதம் அடித்து இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரின் 31 சதம் என்ற சாதனையை முறியடித்தார்.




# உலக நீச்சல் போட்டியில் அமெரிக்கா முன்னிலை!

பார்சிலோனாவில் நடைபெற்று வரும் உலக நீச்சல் சம்பியன்சிப் போட்டிகளில் இது வரை நடைபெற்ற போட்டிகளில் 28 பதக்கங்களைப் பெற்று அமெரிக்கா முன்னிலை வகிக்கின்றது.

அமெரிக்கா இதுவரை பத்து தங்கம், 13 வெள்ளி, 5 வெண்கலம் என்ற அடிப்படையில் பதக்கங்களைப் பெற்றுள்ளது.

பத்து தங்கம், 4 வெள்ளி, 9 வெண்கலம் என்ற அடிப்படையில் ரஷ்யா இரண்டாம் இடத்தையும், 7 தங்கம், 9 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று அவுஸ்திரேலியா மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றது.

சீனா, ஜேர்மன், ஜப்பான் முறையே நான்காம், ஐந்தாம், ஆறாம் இடங்களைப் பெற்றுள்ளன.

## - சிறிலங்கா ஊடாக சட்டவிரோதமாக -

# ஆட்கள் கடத்தப்படுவதைத் தடுக்க சர்வதேச உதவி கோரும் சிறிலங்கா

(கொழும்பு)

சிறிலங்கா ஊடாக வெளிநாடுகளுக்கு ஆட்கள் சட்ட விரோதமாகக் கடத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் சர்வதேச உதவியை சிறிலங்கா அரசாங்கம் கோரியுள்ளது

இதன் முதற்கட்டமாக ரஷ்ய அரசின் அழைப்பை ஏற்று உயர் பொலிஸ்அதிகாரிகளைக்கொண்ட குழு ஒன்று அங்குசெல்ல இருக்கிறது.

ஏற்கனவே இன்ரபோல் உதவியோடு ஆட்கடத்தல் சூத்திரதாரிகள் தேடப்பட்டுவரும் நிலையில் கடல் மார்க்கமாக ஆட்கள் ஐரோப்பிய நாடுகளுக்குள் கடத்தப்படுகையில் அந்தக் கடல் பாதையிலுள்ள நாடுகளின் ஒத்துழைப்போடு அந்த முயற்சிகளை முறியடிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

ஆட்கடத்தலைத் தடுப்பது தொடர்பான பயிற்சிகளைப் பெறும் நோக்கில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயதீர கேரத் தலைமையில் ஆறு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மொஸ்கோ செல்கின்றனர்.

இக்குழுவினர் ஆட்கடத்தல், போதைப பொருள் கடத்தல் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக நவீன தொழில் நுட்ப முறையில் பயிற்சிகளும் பெற இருக்கின்றனர்.

# புலிகள், சனாதிபதிக்கு வழங்கப்பட்ட திட்டவரைவுகளில் வேறுபாடில்லை

## ஜோன் வெஸ்பேர்க் தெரிவிப்பு.

(கொழும்பு)

சனாதிபதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைவுகளில் எந்த வேறுபாடுகளும் இல்லை என நோர்வேயின் விசேடதூதுவர் ஜோன் வெஸ்பேர்க் கூறியுள்ளார்.

சனாதிபதிக்கும் புலிகளுக்கும் அரசு வழங்கிய இடைக்கால நிர்வாக திட்டவரைவுகளில் வேறுபாடுகள் இருப்பதாக சனாதிபதியின் ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமர் கருத்துக் கூறியுள்ளதையடுத்து. ஜோன் வெஸ்பேர்க் இந்த மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு அனுப்பப்பட இருந்த திட்டவரைவு குறித்து சனாதிபதிக்கு முன்னதாகவே தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் இலங்கையின் இறைமையை மீறும் விதத்தில் நோர்வே ஒரு போதும் நடந்து கொண்டதில்லை என்று தெரிவித்த ஜோன் வெஸ்பேர்க் சொந்த அரசியல் நலன்களுக்காக இத்தகைய பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டாம் என்று கதிர்காமரிடம் கேட்டுக்கொண்டார்.

# ஈராக்கிலுள்ள அமெ. படையினர் மீது சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்

ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினரை சர்வதேச மன்னிப் புச்சபை கண்டித்துள்ளது.

இது குறித்து அச்சபை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினரால் இதுவரை ஆறாயிரம் முதல் ஏழாயிரத்தி 800 பொது மக்கள்வரை கொல்லப்பட்டுள்ளனர். பக்கச்சார்பற்ற செய்திகளின்படி இத்தொகை அதிகமாகும்.

மேலும் அமெரிக்க சிறைகளிலுள்ள ஈராக்கிய பொதுமக்கள் அமெரிக்கப்படையினரால் மோசமாக நடத்தப்படுகின்றனர் மற்றும் படையினர் ஈராக்கிய பொது மக்களின் வீடுகளில் சோதனை செய்யும் போது மனிதாபிமான சட்டதிட்டங்களுக்கு மதிப்பளிக்காது நடந்து கொள்கின்றனர் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈராக்கில் தமது படையினர் நாள் ஒன்றுக்கு பத்து முதல் 13 தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாக ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைத்துறைப் பேச்சாளர் மேஜர் வில்லியம் தர்மண்ட் கூறியுள்ளார்.

ஈராக்கில் ஸ்திர நிலையை ஏற்படுத்த அங்குள்ள ஒரு இலட்சத்தி 40 ஆயிரம் எமது படையினர் நெருக்குவாரங்களையும் கஷ்ரங்களையும் அனுபவிக்கின்றனர் என்றார்.

# ஆலயத் திருப்பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரப்பகுதியில் அமைந்துள்ள புனித இராயப்பர் ஆலய திருப்பலி கடந்த 23ஆம் திகதி கொடியேற்றலுடன் ஆரம்பமாகி ஒவ்வொரு நாளும் திருப்பலி பூசை இடம்பெற்று வருகிறது. வரும் முதலாம் திகதியுடன் திருநாட்கள் நிறைவடையும் என பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் தெரிவித்தார். (20)

# திருமலையில் கல்வியை இடைநிறுத்திய மாணவரை இனங்காண நடவடிக்கை

போர் அனர்த்தங்களினால் பாடசாலைக் கல்வியை நிறுத்தியோர் மற்றும் பாடசாலைகளுக்கு செல்லாதவர்களை இனங்கண்டு அவர்களை பாடசாலையில் அனுமதிக்கச் செய்வதற்கான தீவிர நடவடிக்கைகளை திருகோணமலை மாவட்ட கல்வி அபிவிருத்தி நிறுவனம் மற்றும் யுனிசெவ் போன்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

சம்பந்தப்பட்ட கிராமங்களில் அடிமட்டத்திலிருந்தே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதன் விளைவாக இந்த நடவடிக்கை பெரும் வெற்றியளித்து வருவதாக திருகோணமலை கல்வி அபிவிருத்தி நிறுவனப் பொறுப்பாளர் பூ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைய பின்தங்கிய கிராமங்களில் உள்ள பெற்றோருக்கு பாடசாலைக்கல்வி தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# சமுகம் தரவும்

திருமுறிகண்டிப் பகுதியில் ஆலய வீதி அபிவிருத்தி வேலைகள் நடைபெறவுள்ளதால் இவ் அபிவிருத்தி நடைபெறவுள்ள ஆலய சுற்றாடல் பகுதியில் சொந்தமான காணி இருப்பவர்கள் உரிய ஆவணங்களுடன் நாளை காலை 10.00 மணிக்கு திருமுறிகண்டி கிராம அலுவலகத்தில் சமுகம் கொடுக்குமாறு திருமுறிகண்டி ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர்.

## - இலங்கைக்குப் போதைப்பொருள் -

# கடத்த முயன்ற இருவர் தமிழகப் பொலிசாரால் கைது!

(சென்னை)

இலங்கைக்கு ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்த முயன்ற இரண்டு இலங்கைத் தமிழர்களை தாம் கைது செய்துள்ளதாக தமிழக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நேற்று கைது செய்யப்பட்ட இவர்களிடமிருந்து ஒரு கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அல்வாயைச் சேர்ந்த தர்மகுலம் (வயது-44), கரவெட்டியைச் சேர்ந்த ஆனந்தன் (வயது-34) என்பவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் இருவரும் இந்தியாவின் மத்திய பிரதேசத்திலுள்ள மன்சூர் பகுதியில் இந்த போதைப்பொருளைக் கொள்வனவு செய்துள்ளனர். இதை இவர்கள் இராமேஸ்வரம் ஊடாக இலங்கைக்குக் கடத்த இருந்தனர் என்றும் தெரிவிக்கும் பொலிசார் இவர்கள் இருவரும் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று கூறியுள்ளனர்.

## கொல்லப்பட்ட சதாமின் பிள்ளைகளின்

# சடலங்களை ஒப்படைக்குமாறு சதாம் மைத்துனர் கோரிக்கை!

(பாக்தாத்)

சதாம் ஹுசைனின் மைத்துனர்களில் ஒருவர் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்ட சதாம் ஹுசைனின் மகன்மார் இருவரது சடலங்களையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு பாக்தாத்திலுள்ள அமெரிக்கப் படையினரிடம் கேட்டுள்ளார்.

தாம் இந்தச் சடலங்களை இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்யவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர் கேட்டுக்கொண்டதற்கு அமெரிக்கப் படையினரால் இதுவரை எதுவிதபதிலும் கூறப்படவில்லை.

அமெரிக்கப் படையினருடனான மோதல் ஒன்றில் கடந்தவாரம் ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனின் மகன்மாரான உதய், குவாஸி ஆகிய இருவரும் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்கப் படையினர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

## கிளாலிக் கடற்பர...

ளாளர்கள் அச்சமடைந்துள்ளனர்.

கடந்த வாரம் இக்கடலில் பகல் வேளையில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பள்ளிக்குடாவைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட ரவி என்பவரும் அவரது மகனும் கடற்படையினரால் தாக்கப்பட்டனர். இதற்கு முன்னரும் இவ்வாறான தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (34)

# தொழில் பயிற்சி திறப்பு விழாவும் பயிற்சி நெறி ஆரம்பமும்

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியின் கண்டாவளைப் பிரதேசத்திற்கான தொழில் பயிற்சி நிலையத் திறப்பு விழாவும் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வும் இன்று காலை 10.00 மணிக்கு தருமபுரம் ம.வி. அருகில் உள்ள கானான் நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் நடைபெறவுள்ளது. கண்டாவளைப் பிரதேசத்தில் இருந்து தொழில் பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரையும் வருகை தருமாறு தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் கூறியுள்ளார்.

## சண்டே லீடர்...

டல் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த பாராளுமன்றக் கூட்டத் தொடரின் போது பாராளுமன்ற கூட்டத் தொகுதியில் நடைபெற்றுக் கொண்டிருந்த உரையாடல் ஒன்றின் போது அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்ண, அமைச்சர் மகேஸ்வரன் உட்பட பாராளுமன்ற உறுப்பினர் மத்தியில் வைத்து இந்த மிரட்டல் விடுக்கப்பட்டது.

# ரயில்வேத் திணைக்களத்தை அரசு அரசியல்வாதிகளுக்கு விற்க முனைகிறது

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

மதிப்பிட முடியாத பெறுமதி வாய்ந்த ரயில்வே சேவைத்திணைக்களத்தை இந்த அரசாங்கம் தமது அரசியல் வாதிகளுக்கு விற்பனை செய்வதை நோக்கமாகக் கொண்டு ரயில்வேத் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்ற முயற்சி செய்கிறது. இதனை உடனே நிறுத்த வேண்டுமென அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ அரசைக் கேட்டுள்ளார்.

மேலும் அவர் தமது உரையில் கூறியிருப்பதாவது, அரசு வரவு செலவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாமல் மக்களிடம் சுமையை ஒப்படைக்கிறது. இது தொடர்பாக உரையாற்றிய ஒருசில நாட்களில் மீண்டும் உரையாற்றியிருக்க வேண்டும் என நான் நினைக்கவில்லை. அரசின் செயற்பாடுகள் இவ்வாறு உரைநிகழ்த்த வைக்கிறது. எதிர்க்கட்சி என்ற வகையில் அவற்றைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அண்மையில் ரயில்வேத் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவது பற்றியும் வருமான வரி அறவிட புறம்பான சபை அமைக்கப்படுவது பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன. இவ்வாறு செய்வதனால் பொதுமக்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாவர். வேலை இழக்கவும் நேரிடும் என்பதை இச்சபையில் எடுத்துக்கூறுவது எனது கடமையாகும் என்று கூறியுள்ளார்.

மேலும் மக்களின் ஆலோசனையைப் பெறாமல் அரசு தான்தோன்றித்தனமாகச் செயற்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இந்தச் சபையில் அனைவரையும் மதித்து நான் வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றேன் என்று கூறிய அவர் தொடர்ந்து பேசுகையில், மக்களின் நலனைக் கருத்திற் கொண்டே அரசாங்கம் நடைபெறுகிறது. அவர்களின் கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க வேண்டும். அவர்கள் சாதாரணமாக வாழவேண்டும். அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தை நாளுக்குநாள் குறைக்க நினைப்பது தவறு. இது காலத்துக்கேற்ற நடவடிக்கை அல்ல. இவ்வாறு அவர் கூறினார்.

## முடிவை மறுபரி..

இதில் இரண்டு விடயங்கள் இருக்கின்றன. ஒன்று இந்த முகாம் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் இருக்கின்ற உறவிலே நெருக்கடிகளைக் கொண்டு வருகிறது. இந்த முகாம் தொடர்பாக புலிகள் எடுத்துள்ளள நிலைப்பாட்டை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறியுள்ளது. இந்த முகாமை அகற்ற அரசிற்கிருக்கின்ற ஒரு வழி பலத்தைப் பயன்படுத்துவது அதற்கு நாங்கள் மிகவும் எதிர்ப்பாக இருக்கின்றோம். ஏனென்றால் இந்தப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியும என்பது எங்கள் நம்பிக்கையாகும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தீர்ப்புக்கள் விடுதலைப் புலிகளுக்கு மகிழ்ச்சிதரக்கூடியதாக இல்லை.

நீங்கள் உங்களது அதிருப்தியை புலிகள் அமைப்பிற்கு தெரிவித்தீர்களா? என கேட்டபோது.

புலிகளின் ஸைற்றிஸ் தற்போது அதிகமான வேலைகள் இருக்கின்றன. முக்கியமாக அரசாங்கம் அனுப்பியுள்ள இடைக்கால நிர்வாகத்திட்டத்தை ஆராய்ந்து பார்ப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். அது முக்கியமான விடயம் என்று எங்களுக்குத் தெரியும் எனவேதான் புலிகளை கண்காணிப்புக் குழுத்தலைவர் சந்திக்க வந்து சந்திக்க முடியாமல் போனது ஒரு பெரிய விடயமல்ல இது அவர்கள் எம்முடன் பேச விரும்பவில்லை என்பதன் அறிகுறியாக நாம் கருதவில்லை. இருப்பினும் கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலையிலே கண்காணிப்புக் குழுவிற்குகெதிராக ஹர்த்தால் நடந்தது என்பதை அறிந்து மிகவும் கவலைப்படுகிறோம். இப்படி எமக்கெதிராக ஹர்த்தால்கள், ஊர்வலங்கள் போன்றவற்றை ஏற்படுத்துவதிலிருந்து புலிகள் விலகிநிற்க வேண்டும். ஏனென்றால் இது புலிகளுக்கும் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையிலான பிரச்சினை கிடையாது. போர்நிறுத்தக் கண்காணிப்பு மற்றும் அதற்கான ஒரு குழு என்ற சிந்தனையையே பாதிக்கும் ஒன்றாக இந்த விடயம் அமைந்துள்ளது என்றார்.

## அரசியல்துறைப்...

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடன் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன், தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் சஞ்சே ஆகியோரும் சென்றுள்ளனர் (லோ)

## திருமலையில் அரச...

காணிகளை சிங்கள மக்களுக்கு வழங்கும் பொருட்டு நேற்று முன்தினம் சிறிலங்காவின் காணி அமைச்சினால் நடமாடும் சேவை ஒன்று திருகோணமலையில் நடத்தப்பட இருந்தது. காணி அமைச்சர் ராஜித சேனாரட்ணவும் கலந்து கொள்ள இருந்த இந்த நடமாடும் சேவை பின்னர் இரத்துச் செய்யப்பட்டது.

திருமலையில் சிங்கள மக்களுக்கு காணி வழங்கும் அரசின் நடவடிக்கை குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களை ஆர்.சம்பந்தன், கே.துரைரட்ணசிங்கம் ஆகியோர் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபருடன் விவாதித்துள்ளனர்.

## 14வருடங்களின் பின்..

போது கடந்த 14 வருடமாக பொது மக்கள் எவரும் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

தேவாலயத்தின் சுரூபங்கள் அனைத்தும் கொள்ளையிடப்பட்டுள்ளதுடன் ஜன்னல்கள், கதவுகள் மற்றும் பெறுமதி வாய்ந்த மின்சாரக்கம்பங்கள் அனைத்தும் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பங்குத்தந்தை கூறியுள்ளார்.

10.00மணி முதல் 12.00 மணிவரை வழிபாட்டிற்கு மக்களை அனுமதித்து பின்னர் அவர்கள் திருப்பிஅனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.